புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜுலை 04, 2024 • புரட்சி 24 • முழக்கம் 25 • விலை ரூ.3.00

# தேசியத் தேர்வு முகமையை ஒழிப்பதே தீர்வு

மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத்தேர்வில் நடந்த முறைகேடு நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. இதில் வினாத்தாள் கசிவு, ஆள்மாறாட்டம் என இந்த ஆண்டு பல புகார்கள் எழுந்துள்ளன. கடந்த 6 ஆண்டாக இப்படிப்பட்ட மோசடிகள் பல இடங்களில் நடந்திருப்பதும் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. நீட்டை ஆரம்பத்தில் இருந்தே தமிழ்நாடு மட்டும் எதிர்த்து வந்த நிலையில், இப்போது ஒட்டுமொத்த நாடும் நீட்டுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி உள்ளது.

இந்த நிலையில், நீட் விவகாரம் மூலம் மற்றொரு மாபெரும் மோசடி அம்பலமாகி உள்ளது. இந்த தேர்வினை நடத்தும் தேசிய தேர்வு முகமை தொடர்பாக பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகி உள்ளன. பொதுவாக இதுபோன்ற போட்டித் தேர்வுகளை நடத்துவதற்காக அமைக்கப்படும் தேர்வாணையங்கள் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டு முறைப்படி அரசு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படுவதுதான் வழக்கம்.

அதுபோலத்தான் மத்திய பணியாளர்கள் தேர்வாணையம் (யுபிஎஸ்சி), சிபிஎஸ்இ, பல்கலைக்கழக மானிய குழு போன்றவை செயல்பட்டு வருகின்றன. ஆனால் இதுபோன்ற முறைப்படியான அமைப்புகள் நடத்தி வந்த நீட், யுஜிசி நெட், ஜேஇஇ, ஜிபேட், சிமேட், கியூட் உள்ளிட்ட தேசிய அளவிலான தேர்வுகளை நடத்துவதற்காக தன்னாட்சி அதிகாரம் பெற்ற அமைப்பாக தேசிய தேர்வு முகமையை ஒன்றிய பாஜ அரசு 2018ல் அமைத்தது.

இந்த முகமையில் நாடு முழுவதும் சுமார் 1.3 கோடி மாணவ, மாணவிகள் பதிவு செய்துள்ளனர். அப்படிப்பட்ட கோடிக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடிய என்டிஏ என்பது ஒன்றிய அரசின் அமைப்பாகத்தான் இதுவரையிலும் கருதப்பட்டது. நீட் போன்ற போட்டித் தேர்வுகளை அரசு தான் நடத்திக் கொண்டிருக்கிறது என நம்பி அதன் மீது நம்பிக்கை வைத்து கோடிக்கணக்கான மாணவ, மாணவிகள் இரவு பகலாக படித்து தேர்வு எழுதுகின்றனர்.

ஆனால் என்டிஏ என்பது ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்டிருப்பது ஆச்சரியத்தை அளிக்கிறது. இந்த அமைப்பானது, 1860 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சொசைட்டி பதிவு சட்டத்தின் கீழ் கடந்த 2018ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான சான்றிதழை என்டிஏவின் இணையதளத்திலும் பார்க்க முடியும். இதுதான் தற்போது பெரும் சந்தேகங்களை எழுப்பி உள்ளது. என்டிஏ என்பது வெறும் சங்கமாக பதிவு செய்யப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன? இதற்கென ஒரு பொதுக்குழு என்பது இல்லை.

இந்த முகமையை அமைக்க எந்தவொரு நாடாளுமன்ற சட்டமும் நிர்வகிக்கவில்லை, ஒன்றிய மாநில அரசுகள் இடம் பெறவில்லை, மேலும் இது அரசு ஊழியர்களின் நடத்தையை நிர்வகிக்கும் விதிகளுக்கு உட்பட்டதாகவும் இல்லை. ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித்துறையின் கீழ் இந்த முகமைக்கு நிதியளிக்கப்பட்டுள்ளது. இது கல்வி அமைச்சகத்தின் கீழான ஒரு தன்னாட்சி மற்றும் தன்னிறைவு மிக்க தேர்வு முகமை என்று கூறுகிறது.

ஆனால், பத்து பேர் கொண்ட நிர்வாகக் குழுதான் தேசிய தேர்வு முகமையை வழிநடத்துகிறது. இதனால், தேசிய தேர்வு முகமை இப்போது தனியார் சங்கமாக மட்டுமே செயல்படுகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த அமைப்பு யார் கட்டுப்பாட்டில் உள்ளது? போன்ற பல கேள்விகள் எழுந்துள்ளன.

வெறும் சங்கமாக பதிவு செய்யப்பட்டிருப்பதால் என்டிஏவில் ஏதாவது தவறு நடந்தால் அதற்கு அரசு பொறுப்பேற்க வேண்டிய அவசியமில்லை. சுயாதீனமான இந்த அமைப்புதான் அத்தனைக்கும் பதில் சொல்ல வேண்டும். எனவே ஊழல்கள் அம்பலமானால் கூட அதற்கு அரசு பொறுப்பேற்காமல் இருந்து விட முடியும்.

இந்த முகமையின் முறைகேடுகள் மற்றும் தவறான நடத்தை குற்றச்சாட்டுகள் போன்றவை இந்த முகமை நடத்திய 15 தேர்வுகளை சிதைத்துள்ளன. எனவே, நீட் தேர்வு மட்டுமல்ல தேசிய தேர்வு முகமையை ஒழித்தால் மட்டுமே மாணவர்களின் எதிர்காலத்தை காப்பாற்ற முடியும் என கல்வியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## சட்டப்பூர்வ ஆதரவு வழங்காதது ஏன்?

கடந்த பத்தாண்டுகளில், பாஜக தலைமையிலான ஒன்றிய அரசாங்கமானது சர்ச்சைக்குரிய மூன்று வேளாண் மசோதாக்கள் உட்பட, மக்களவையில் 427 மசோதாக்களையும், மாநிலங்களவையில் 365 மசோதாக்களையும் நிறைவேற்றியது. இருப்பினும், மாணவர்களின் நலன் கருதி தேசிய தேர்வு முகமைக்கு சட்டப்பூர்வ ஆதரவை வழங்குவதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசு எந்த ஆர்வமும் காட்டவில்லை. இந்தச் சட்டம் இல்லாததால், தேசியத் தேர்வு முகமை பொறுப்புக்கூறலைத் தவிர்க்கவும், ஊழல் அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக எந்த எதிர்விளைவுகளையும் சந்திக்காமல் இருக்கவும் அனுமதிக்கப்படுகிறது.

## உலகின் 2வது பெரிய தேர்வு முகமை என்டிஏ

என்டிஏ நடத்தும் பல்வேறு தேர்வுகளில் ஒவ்வொரு ஆண்டும் 1 கோடி மாணவர்கள் பதிவு செய்கின்றனர். 2023ல் அதிகபட்சமாக 1.23 கோடி மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். இதன் மூலம் உலகின் 2வது பெரிய தேர்வு நடத்தும் அமைப்பாக என்டிஏ மாறி உள்ளது. இந்த ஆண்டு நீட் யுஜி தேர்வை மட்டும் 24 லட்சம் மாணவர்கள் எழுதி உள்ளனர். வினாத்தாள் கசிவால் ரத்து செய்யப்பட்ட யுஜிசி நெட் தேர்வை 11 லட்சம் மாணவர்கள் எழுதி உள்ளனர். கியூட் யுஜி மற்றும் கியூட் பிஜி தேர்வை முறைகேடு 13.4 லட்சம், 99,717 மாணவர்கள் எழுதி உள்ளனர். ஜேஇஇ மெயின் தேர்வை 14.7 லட்சம் மாணவர்கள் எழுதி உள்ளனர். தேர்வை நடத்துதல், விடைத்தாள் திருத்துதல் போன்ற முக்கிய பொறுப்புகளை என்டிஏ வகிக்கிறது.

## என்டிஏ நடத்தும் தேர்வுகள்

- கியூட் யுஜி
- கியூட் பிஜி
- யுஜிசி நெட்
- ஜேஇஇ
- சிமேட்
- சிமேட்
- ஜேஎன்யு நுழைவுத் தேர்வு
- ஐசிஏஆர் அகில இந்திய நுழைவுத்தேர்வு
- ஓட்டல் மேனேஜ்மென்ட் நுழைவுத்தேர்வு
- பார்மஸி ஆப்டிடியூட் டெஸ்ட்
- என்ஐஎப்டி நுழைவுத்தேர்வு
- ஐஜிஎன்ஓயு பிஎச்டி மற்றும் ஓபன்மேட் (எம்பிஏ) நுழைவுத்தேர்வு
- சிஎஸ்ஐஆர் தேசிய தகுதித் தேர்வு
- ஆசிரியர்களுக்கான வருடாந்திர புதுப்பித்தல் தேர்வு
- ஸ்வயம் தேர்வு

## செங்கல்பட்டில் மண்டல மாநாடு

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் “சுயமரியாதை இயக்க மற்றும் குடிஅரசு” நூற்றாண்டை முன்னிட்டு செங்கல்பட்டில் மண்டல மாநாடு நடைபெறவுள்ளது.

இதுகுறித்த ஆலோசனைக் கூட்டமானது, 17.06.2024 அன்று மயிலாப்பூர் கழகத் தலைமை அலுவலகத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழகத் தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், மடிப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர் எட்வின் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## உடற்கொடை வழங்க பட்டியல் அளிப்பு

கழகத் தலைவரின் 77வது பிறந்தநாளை முன்னிட்டு இரண்டாம் கட்டமாக சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் இராயப்பேட்டை இராஜேஷ், வீரா, கோபிநாத், மயிலை மாணிக்கம், அருண் மற்றும் திருப்பூர் பிரசாந்த் ஆகியோர் உடற்கொடை வழங்குவதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 30.06.2024 அன்று கழகத் தலைமை நிலையச் செயலாளர் தோழர் தபசி குமரனிடம் வழங்கினார்கள்.



ஏற்கனவே மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, அருண்குமார், சூர்யா, விஜய்குமார், திண்டுக்கல் பெரியார் நம்பி, மயிலை குமார் ஆகியோர் உடற்கொடை வழங்குவதற்கான விண்ணப்பத்தை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் மு.முகில்ராசு, மு.ரவிச்சந்திரன், மா.ராமசாமி ஆகியோர் உடற்கொடை வழங்குவதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்துள்ளனர்.

தலையங்கம்

# நாய் வால் நிமிராது; பாஜக திருந்தாது!

காலனிய பாரம்பரியத்தில் இருந்து விலகுகிறோம் என்று புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்தியிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. ஜுலை ஒன்றாம் தேதிமுதல் அமலுக்கு வந்திருக்கிற இந்த புதிய சட்டங்கள் தேசியப் பிம்பத்தை வலுப்படுத்தி மாநில உரிமைகளையும், கருத்துரிமைகளையும் பறித்துக்கொள்ளும்படியாகவே இருக்கிறது. புதிய சட்டங்களுக்கு வைக்கப்பட்டிருக்கிற பெயரில் இருந்தே அதை உணர முடிகிறது. 1860-ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பாரதிய நியாய சன்ஹிதா (BNS) என்றும், 1973-ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC) பாரதிய நாகரிக் சுரக்சா சன்கிதா (BNSS) என்றும், 1872-ஆம் ஆண்டின் இந்திய சாட்சியச் சட்டம் (IE Act) பாரதிய சாக்சிய அதினியம் (BSA) என்றும் மாற்றப்பட்டுள்ளன. அரசமைப்புச் சட்டத்தின் 348வது பிரிவு, சட்டங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் எனக் கூறுகிறது. ஆனால் அதை உதறித் தள்ளிவிட்டு இந்தியில் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, இந்தச் சட்டங்கள் இந்திய அரசியலமைப்பின் கூட்டுப் பட்டியல் 3-இல் இடம்பெற்றுள்ளன. சட்டங்களை மாற்றுவதற்கு முன்பாக, மாநில அரசுடன் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நாடாளுமன்றத்தில் கடந்த ஆண்டு மசோதாக்கள் நிறைவேற்றப்படும்போதே எந்த விவாதமும் நடைபெறவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்களை கூண்டோடு இடைநீக்கம் செய்த வேளையில் மசோதாவை நிறைவேற்றியது பாஜக அரசு. மாநில அரசுகளிடம் எந்தக் கருத்தும் கேட்கப்படவில்லை.

‘Sedition’ எனப்படும் தேசத்துரோகம் இந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அதற்கு மாற்றாக, ‘இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருங்கிணைப்புக்குத் தீங்கு விளைவிப்பது’ குற்றம் என்பது சேர்க்கப்பட்டுள்ளது. பழைய தேசத்துரோக சட்டத்திற்கும் இதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கு இதற்கு முன்பு அதிகபட்சமாக 3 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. இப்போது ஆயுள்தண்டனை கூட விதிக்கப்படலாம் என்ற அளவுக்கு கடுமையாக்கப்பட்டுள்ளது. கருத்துரிமையை பறிப்பதற்கான, சமூக - அரசியல் செயற்பாட்டாளர்களை ஒடுக்குவதற்கான புதிய ஏற்பாடாகத்தான் இப்பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

முன்பு பயங்கரவாதச் சட்டப் பிரிவுகளின் கீழ் இருந்த கடுமையான பிரிவுகள், இப்போது குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இதுவரை, UAPA பிரிவுகளின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள்தான் தாங்கள் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டும். இனி புதிய குற்றவியல் சட்டத்தின் கீழ் அரசுக்கு எதிராக செயல்பட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டாலே, குற்றம்சாட்டப்பட்டவர்கள்தான் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டும். சாதாரண போராட்டங்களைக்கூட, அரசுக்கு எதிரான செயல்பாடாகக் காட்டி ஒருவரைக் கைதுசெய்ய முடியும். அப்படி கைது செய்யப்பட்டவர் நிரபராதி என்பதை அவர்தான் நிரூபிக்க வேண்டும் என்று மிக மோசமான ஏற்பாடுகளை புதிய சட்டத்தில் செய்து வைத்திருக்கிறது பாஜக அரசு.

காலனிய பாரம்பரியத்தில் இருந்து விடுபட வேண்டுமென்றால் முதலில் ஆளுநர் பதவியைத்தான் ஒழித்திருக்க வேண்டும். ஆனால் ஆளுநர் பதவியை வைத்துக்கொண்டே காலனிய பாரம்பரியத்தை ஒழித்துவிட்டோம் என்று பாஜக தலைவர்கள் பேசுவது நகைப்பை ஏற்படுத்துகிறது. குற்றவியல் நடைமுறைச் சட்டம் காலனிய ஆட்சியில் இயற்றப்பட்டதே அல்ல. 1973-இல் தான் இயற்றப்பட்டது. இப்போது அதனை மொத்தமாக மாற்ற வேண்டிய அவசியம் என்ன வந்தது? இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 13-வது பிரிவு பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட எந்த ஒரு சட்டமும் அடிப்படை உரிமைகளை மீறினால் தவிர, தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்கிறது. எனவே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை தூக்கியெறிந்து விட்டு அந்த இடத்தில் வருணாசிரம தர்மத்தின்படி மனுசாஸ்திரத்தை வைக்க வேண்டுமென்பதுதான் பாஜகவின் மாபெரும் கனவு. அந்த கனவுக்கான முயற்சியாகத்தான் இதனை எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

அதேபோல மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்துறைக்கு, ஏகபோக அதிகாரங்களை வழங்கியிருக்கிறது புதிய சட்டங்கள். காவல்துறை ஒருவரைக் கைதுசெய்யும்போது, விசாரணைக்கு முன்பே சொத்துகளை முடக்கவும் முடியும். முன்பு ஒருவர் கைதுசெய்யப்பட்டால், 15 நாட்களுக்குள் காவல் துறையினர் நீதிமன்றத்தை அணுகி போலீஸ் காவல் கேட்க வேண்டும். ஆனால், தற்போது இந்த கால இடைவெளி 60 நாட்களாக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த 60 நாட்களில் பிணை கிடைப்பது கடினமாகலாம். ஒரு குற்றம் நடந்திருக்கிறதா என்பதை உறுதிசெய்ய, காவல்துறை 14 நாட்களை எடுத்துக்கொள்ள BNSS வாய்ப்பு வழங்குகிறது. ஆகவே, 14 நாட்கள் வரை முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்யாமல் இருக்க முடியும். உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த லலிதா குமாரி என்பவரின் வழக்கில், ஒரு குற்றம் நடந்ததாக புகார் வந்தால், உடனடியாக முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் தற்போது ஒரு குற்றம் நடந்திருக்கிறதா என்பதை உறுதிசெய்ய, காவல்துறை 14 நாட்களை எடுத்துக்கொள்ள BNSS வாய்ப்பு வழங்குகிறது. ஆகவே, 14 நாட்கள் வரை முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்யாமல் இருக்க முடியும்.

தலைமைக் காவலர் மட்டத்திலான காவலர் ஒருவரே, பயங்கரவாதக் குற்றச்சாட்டின் கீழ் ஒருவரைக் கைதுசெய்ய முடியும். “குற்றம்சாட்டப்பட்டவருக்கு மின்னஞ்சல் அனுப்புவது, விவாதிப்பது, ஒரு தேநீர் அருந்துவது கூட இனி குற்றம்தான்”. இத்தகைய கொடூர சட்டத்தை எதிர்த்து நாடு முழுக்க மக்கள் திரள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியம். பெரும்பான்மை பலத்தோடு பாஜக ஆட்சியில் இருந்தபோதே மூன்று திருத்தப்பட்ட வேளாண் சட்டங்களை விவசாயிகள் நிறுத்தச் செய்த வரலாறு இருக்கிறது. இப்போது பெரும்பான்மை பலம் இல்லாமல் கூட்டணிக் கட்சிகளின் துணையோடு ஆட்சி புரிகிறது பாஜக. ஆகவே பலமற்ற பாஜகவை பணிய வைப்பது சாத்தியமே!

# வினா விடை

- ***காங்கிரஸ் பெற்றது 543க்கு 99 மட்டுமே, 100க்கு அல்லல; அவர்கள் பாஸ் ஆகவில்லை - மோடி***

*நாங்களும் பாஸ் மார்க் வாங்கவில்லை, நாங்கள் எட்டாவது பாஸ், அவர்கள் பத்தாவது பெயில்.*

- ***நாடாளுமன்றத்தில் நுழையும் தகுதி இல்லையென்றாலும் அதை வளர்த்துக் கொள்ள வேண்டும். - மோடி***

*அதனால் தான் நான் நாடாளுமன்றத்தின் பக்கமே திரும்பிப் பார்ப்பது இல்லை.*

- ***ஊழலை ஒழிக்கும் பொறுப்பை மக்கள் எங்களிடம் அளித் தார்கள் - மோடி***

*அந்த நம்பிக்கை வீண் போய்விடக்கூடாது என்பதனால் தான் தேர்தல் பத்திர திட்டத்தை உருவாக்கி உச்சநீதிமன்றத்தால் சாட்டையடி வாங்கினோம்.*

- ***காங்கிரஸ் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் தான் வெற்றிபெற்றுள்ளது என்பதை மறந்துவிட வேண்டாம் - மோடி***

*நாங்கள் அப்படி கேவலமானவர்கள் அல்ல, கூட்டணி ஆதரவுடன் தான் ஆட்சியையே அமைத்தோம்.*

- ***ராகுல்காந்தி மீது சபாநாயகர் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். நீங்கள் சிரித்துக் கொண்டே இருக்கிறீர்கள் - மோடி***

*அப்படி நடவடிக்கை எடுக்காவிட்டால் நாங்கள் சபாநாயகர் மீது நடவடிக்கை எடுத்துவிடுவோம் எச்சரிக்கை*

- ***ராகுல்காந்தி குழந்தைத்தனமாக பேசுகிறார் - மோடி***

*ஆம், நான் கடவுள் அவதாரம் என்று மக்களிடம் பேசுவது போல் அவரால் பேச முடியுமா? என்று சவால் விடுகிறேன்.*

# மடத்துக்குளம் மோகன் நினைவேந்தல்



*கழகத் தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் இரா.மோகன் அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி நினைவேந்தல் - பொதுக்கூட்டம் 22.06.2024 அன்று உடுமலை வெங்கட கிருஷ்ணா சாலையில் நடைபெற்றது.*

*உடுமலை முற்போக்காளர் கூட்டமைப்பு சார்பாக நடந்த இப்பொதுக் கூட்டத்திற்கு ஆதித்தமிழர் பேரவை மாநில வழக்கறிஞர் அணிச் செயலாளர் பெரியார்தாசன் தலைமை தாங்கினார், ஜா.சாதிக்பாட்சா முன்னிலை வகித்தார், விஜயசேகரன் வரவேற்புரையாற்றினார்.*

*கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் திருப்பூர் துரைசாமி, வெல்பேர் கட்சி மாநிலத் துணைத் தலைவர் மணிமாறன், இந்திய ஐக்கிய கம்யூனிஸ்டு கட்சி தொழிற்சங்க செயலாளர் குணசேகரன், மாவட்டச் செயலாளர் மூர்த்தி, விடுதலைமணி , திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் முகில் இராசு மற்றும் முற்போக்காளர் கூட்டமைப்பைச் சேர்ந்த சிவானந்தம், இயல் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் “தேர்தலில் சனாதன சக்திகளை வீழ்த்திய தமிழ்நாட்டில், மதக்கலவரத்தைத் தூண்டத் துடிக்கும் சனாதனிகள்” எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.*

*நிகழ்ச்சியில் கழகத் தலைவருக்கு பெரியார் படத்தை பென்சிலில் ஓவியமாக வரைந்து பள்ளி மாணவர் ஹரிஹரன் பரிசளித்தார். தலைவர் அவர்கள் மாணவரை பாராட்டி சிறப்பித்தார்.*

*நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி, கழகத் தோழர்கள் கடத்தூர் அய்யப்பன், மாநகர அமைப்பாளர் முத்து, திருப்பூர் அய்யப்பன், பாலகுமரன், சுபாசு ஆகியோர் கலந்து கொண்டனர்.*

# கழகத்தில் புதிய தோழர்கள் இணைந்தனர்

சேலத்தைச் சேர்ந்த சக்தி, மதி, ராஜேஷ், வேல், சிவா, ரமேஷ், சதீஷ் ஆகியோர் 30.06.2024 அன்று சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் டேவிட் தலைமையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.



## மூத்த பத்திரிகையாளர் சிவசுப்பிரமணியம் விவரிக்கிறார்

# வீரப்பனிடம் இருந்து ராஜ்குமாரை மீட்டதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் பங்கு

**23.06.2024 அன்று கொளத்தூரில் நடைபெற்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் 77வது பிறந்தநாள் விழாவில் மூத்த பத்திரிகையாளர் சிவசுப்ரமணியம் ஆற்றிய வாழ்த்துரை.**



உலகில் எவ்வளவு பெரிய பல்கலைக்கழகமாகக் கூட இருக்கலாம். அங்கு சென்றால் விளையாட்டுக்கு என்று ஒரு துறை, இதழியலுக்கு ஒரு துறை, அறிவியலுக்கு ஒரு துறை, அறிவியலுக்குள் இயற்பியல், வேதியியல் என்று தனித்தனியாக பல்வேறு துறைகள் இருக்கும். ஆனால் ஒட்டுமொத்த துறையும் ஒரே இடத்தில் இருக்கிறது என்றால் அது உக்கம்பருத்திக்காடுதான்.

இசை, மொழி, இலக்கியம், தமிழ்த்தேசியம், வரலாறு, திராவிடம், ஆரியம் என எதைப்பற்றிக் கேட்டாலும், அதுகுறித்து நீண்ட நெடிய ஒரு விளக்கத்தினை தோழர் கொளத்தூர் மணியிடம் இருந்து பெற முடியும். தந்தை பெரியார் தனது வாழ்நாளில் அவரது சிந்தனைகளை மிகப்பெரிய ஆவணமாக எழுதி வெளியிட்டு இருக்கிறார். அதில் இருப்பதைக் கடந்து மேலும் பல தகவல்களை உள்வாங்கியிருக்கும் அறிவுப்பெட்டகமாக திகழ்கிறார் தோழர் கொளத்தூர் மணி. அவர் வழியாகவே அதை ஒரு நூலாக எழுத முயற்சித்தும் அது நிறைவேறவில்லை. இருந்தாலும் தோழர் கொளத்தூர் மணியின் வரலாறை நான் எழுதலாம் என்றிருக்கிறேன். என்னை பத்திரிகை துறையில் ஒரு குறிப்பிட்ட நபராக மாற்றியது தந்தை பெரியாரின் சிந்தனைகள்தான். அதற்கு என்னை தூக்கிவிட்டு, பின்புலமாக இருப்பது தோழர் கொளத்தூர் மணி மட்டும்தான்.

1992ஆம் ஆண்டு ஈரோட்டில் உள்ள தோழர் இரத்தினசாமியின் உழவு இயந்திர அங்காடியில்தான் முதல்முறையாக தோழர் கொளத்தூர் மணி அவர்களை சந்தித்தேன். எனக்கு அப்போது 21 வயது இருக்கும். எல்லோரிடமும் இயல்பாக பேசியதைப் போலவே என்னிடமும் பேசினார்.

அப்போது வீரப்பனை பார்க்கலாம் என்றிருக்கிறேன் என்றேன். அதற்கு அவர் அது ஒன்றும் பெரிய விசயம் இல்லை. அவரைப் பார்ப்பதற்கு உறுதியாக இருந்தால் இரண்டு ஆண்டு சிறையில் இருக்க வேண்டும் என்றார். இதை நான் சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை. உடனடியாக சரி என்று கூறினேன். ஏனென்றால் அண்ணனுக்கு யோசித்து சொல்கிறேன் என்றால் பிடிக்காது. மற்றொன்றையும் அவர் சொன்னார். நீங்கள் மட்டும் உள்ளே சென்றால் பரவாயில்லை, நானும் உள்ளே செல்ல வேண்டிய நிலை வரும் என்றார்.

இதற்கு பயந்தால் வீரப்பன் யார்? அவரின் நோக்கம் என்ன? என்பதைப் பற்றி எதுவும் தெரியாமல் போய்விடும். அதனால் இரண்டு பேரும் செல்ல தயாராகிவிட்டால் சென்று பார்த்து விடுவோம் என்றார் அண்ணன் கொளத்தூர் மணி. அதற்குப் பிறகு நாங்கள் இருவரும் இரண்டு மாத காலம் சந்தித்து பல்வேறு விசயங்களை பேசி பரிமாறிக் கொண்டோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கர்னல் கிட்டு ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஈழத்துக்கு வரும் போது இந்தியக் கடற்படை அவரை கப்பலோடு வைத்து கொன்றுவிடுகிறது. இந்த நிகழ்வு நடந்து ஒரு சில நாட்களுக்கு பிறகு ஈரோடு இரத்தினசாமியின் துனைவியார் பிரேமா அவர்கள், “மணி அண்ணன் கேமரா, டேப் ரெக்கார்டர் இவையெல்லாம் எடுத்துக்கொண்டு உடனடியாக மேட்டூர் படிப்பகம் வரச்சொன்னார்” என்று சொன்னார். உடனே நானும் மேட்டூர் படிப்பகம் விரைந்தேன். நான் கூட கிட்டு தொடர்பான செய்தியாக இருக்கும் என்றுதான் நினைத்தேன்.

ஆனால் அது வீரப்பன் தொடர்பான செய்திதான். இன்று வருவதாகச் சொன்ன நபர் வரவில்லை. நாளை மறுநாள் வாங்க, ஏதோ பிரச்சனை போல் உள்ளது என்று சொன்னார். நானும் அவர் சொன்ன நாளில் மீண்டும் வந்தேன். தனது மோட்டார் சைக்கிளில் என்னை அழைத்துச் என்று அந்த நபரிடம் அறிமுகப்படுத்தினார். பின்னர் மூன்று நான்கு மணிநேர பயணத்திற்கு பின்னர் வீரப்பனை சந்தித்தேன்.

வீரப்பனை சந்தித்தவுடன் அவர் சொன்னார், கொளத்தூர் மணி கிட்ட சொல்லி இருக்கேன், அவர் ஒரு நல்ல ஆளாகத்தான் அனுப்புவார் என்று சின்னப்பொன்னான் சொன்னார். அண்ணன் சொன்ன ஆளு நல்ல ஆளாகத்தான் இருப்பார் என்ற நம்பிக்கையில் நான் உங்களை சந்திக்கிறேன் என்றார் வீரப்பன். பின்னர் அண்ணனை நலம் விசாரித்துவிட்டு நான் அவர் பார்த்ததில்லை, என்னை மாதிரியே அவரும் பலரைப் பஞ்சாயத்துகளை நடத்தி வருகிறார். அவரும் ஒரு மரியாதைக்குரிய நபராக இருக்கிறார் என்பது தெரியும் என்றார். அந்த நம்பிக்கை வீரப்பனோடு 8 ஆண்டுகள் நெருங்கியத் தொடர்பில் இருந்தது. பெரும்பாலும் அவர் என்னிடம் எதையும் மறைத்ததில்லை. காரணம் நான் மணி அண்ணனால் அறிமுகப்படுத்தப்பட்டவன் என்பதால்.

2000-இல் எதிர்பாராதவிதமாக கன்னட நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் கடத்திவிடுகிறார். இந்த நேரத்தில் உளவியல் ரீதியாக பல பேருடன் உரையாடும் போது இந்த பிரச்சனைக்கு அண்ணன் கொளத்தூர் மணிதான் சரியாக இருப்பார் என்று புரிந்தது. ஏனென்றால் இரு மாநில அரசுகள் சம்மந்தப்பட்டிருந்தது. கலைஞர் என்பவர் ஆயிரம் ஐஏஎஸ்களுக்கு நிகரானவர். கர்நாடகாவின் எஸ்.எம்.கிருஷ்ணாவும் சளைத்தவர் அல்ல. இங்கு வீரப்பன், 130-140 கொலைகளை செய்துவிட்டு இரண்டு மாநில ஐஏஎஸ் - ஐபிஎஸ் அதிகாரிகளுக்கு அல்வா கொடுத்துக் கொண்டிருந்தார். இரண்டு மாநில அரசுகளும் எங்களை நம்பி நக்கீரன் குழுவின் மூலமாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. நான் அண்ணனை சந்தித்தேன். அண்ணா இது எங்களால் முடியாதது. இரண்டு பக்கமும் மிகப்பெரிய அரசியல் நடந்துவருகிறது.

**என்னுடைய 32 ஆண்டு பத்திரிகை உலக வாழ்க்கையில் தலைவர் என்று சொல்லக்கூடிய ஒவ்வொருவருமே அந்த சொல்லை பயன்படுத்த ஆரம்பித்த ஒவ்வொரு வாரமும் அவர்களது சொத்து மதிப்பு உயர்ந்து கொண்டே செல்லும். ஒரு ஜாதி சங்கத் தலைவரின் இன்றைய சொத்து மதிப்பு ஆயிரம் கோடியை தாண்டும். ஆனால் தலைவர் என்ற தகுதியில் இருந்து தன்னிடம் இருந்த சொத்து மதிப்பு குறைந்து ஒரு சுருங்கிய வட்டத்துக்குள் நின்ற தலைவர் யாரென்றால் அது அண்ணன் கொளத்தூர் மணி மட்டும் தான்.**

இதற்கிடையில் இனக் கலவரம் நடந்துவருகிறது. கிட்டத்தட்ட 45-50 நாட்களுக்கு மேலாக தமிழ்நாடு - வட இந்தியாவுக்கான போக்குவரத்து கர்நாடகா வழியாக இல்லை. கர்நாடகாவில் கொள்முதல் செய்யப்பட்ட பல இலட்ச ரூபாய் சரக்குகள் தமிழ்நாட்டிற்குள் கொண்டுவர முடியாமல் நிற்கிறது. அதே போல தமிழ்நாட்டில் இருந்து கர்நாடகா செல்ல முடியவில்லை. இப்படி பதட்டமான சூழல் நிலவுகிறது. இதை சரியான முறையில் கையாள வேண்டும் என்றால் நீங்கள் வந்தால்தான் சரியாக இருக்கும் என்றேன்.

“நான் எப்படி வர முடியும்? நீங்கள் ஒரு பக்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறீர்கள். இதில் எனக்கு என்ன தொடர்பு இருக்கிறது என்றார்” அவர். கர்நாடகாவில் இருந்து சில அமைப்புகளும் தலைவர்களும் அண்ணன் கொளத்தூர் மணியை சந்தித்துப் பேசினார்கள். தமிழ்நாடு காவல்துறையின் சில அதிகாரிகளும் அண்ணனை சந்தித்து நீங்கள் பேசினால்தான் சரியாக இருக்கும் என்றனர். இதை நான் வீரப்பனிடமும் சொல்லவில்லை, கோபாலிடமும் சொல்லவில்லை. அண்ணனிடம் மட்டும் சொல்கிறேன். அண்ணா இன்று இரவு நாங்கள் கிளம்புகிறோம், நீங்க ஈரோடு வந்துருங்க, நம்ம போவோம் என்றேன்.

வீரப்பனுக்கே சொல்லாமல் வருவது எப்படி சரியாக இருக்கும் என்றார் அண்ணன் கொளத்தூர் மணி. திமுகவுக்கும் திராவிடர் கழகத்திற்கும் முரண்பாடான காலம் அது. இந்த நேரத்தில் இது சரியாக இருக்குமா? நான் நேற்றைக்கு கூட ஆசிரியரை சந்தித்த போது ”உங்கள் தலையில் நிறைய சுமை இருக்கிறது. அதை இறக்கி வைக்கப் பாருங்கள். மீண்டும் அந்த சுமையை ஏற்றப் பார்க்காதீர்கள்” என்று சொல்கிறார். அதனால் நான் இதை செய்தால் சரியாக இருக்குமா? என்று கேட்டார். பின்னர் நீண்ட நேரம் கர்நாடகா காட்டுக்குள் நடக்கும் பிரச்சனைகளைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம்.

திடீரென மணி அண்ணன் அவர்கள், “ சரி, இது என்னுடைய சொந்த விருப்பம். இதில் வரக்கூடிய பிரச்சனைகளை கடந்து நாட்டு நலன் மற்றும் தமிழ் மக்களின் நலன் முக்கியமாக இருக்கிறது. அதனால் நான் வருகிறேன்” என்றார். அதற்குப்பிறகுதான் எனக்கும் நம்பிக்கை வந்தது.

அன்று இரவு இருவரும் புறப்பட்டோம். ஈரோடு சக்தி நகரில் உள்ள குடும்ப நண்பர் ஒருவரின் இல்லத்தில் அண்ணன் இருந்தார். மாலை ஐந்து மணிக்கு காரில் சித்தோடு சத்தியமங்கலம் வழியாக சென்றோம். சித்தோடில் தமிழ்நாடு விடுதலைப் படையை சேர்ந்த இனியன் என்பவர் தங்கியிருப்பதாக சொன்னார். என்னுடைய காரை ஓட்டுவதற்கு பாலமுருகன் என்ற தம்பி இருந்தார். அவர் நம் இயக்கத்தைச் சேர்ந்தவர். நான் சொல்லியிருந்த தகவலின்படி பெருந்துறை சாலையில் காரை இயக்கினார். எங்களுடைய ஆசிரியர், பெருந்துறை சாலையில் ஏன் செல்கிறது என்று கேட்டார்? இல்லை இன்னொருவர் இருக்கிறார்? யார்? மணி அண்ணன் என்றவுடனே, அப்பாடா அவர் வந்தால் நமக்கு பிரச்சனை இல்லை, ஒன்றாக செல்லலாம் என்றார். பின்னர் அனைவரும் ஒன்றாக சென்றோம்.

தமிழ்நாடு விடுதலைப் படை அமைப்பைச் சார்ந்த இனியன், இவரை எதற்கு அழைத்து வந்தீர்கள்? நம்ம அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம், இவர் எதற்கு? என்று கேட்டார். காரணம், அவரின் மனநிலை எல்லாமே நாம் தமிழ்த்தேசியம், கொளத்தூர் மணி திராவிடம் என்ற கருத்துதான். சித்தோடில் இருந்து சத்தியமங்கலம் வரைக்கும் எங்களது ஆசிரியரிடம் பேசிவந்த மணி அண்ணன், பின்னர் இனியனொடு பேச தொடங்கினார். பேசியதற்கு பிறகு இனி இவர்களோடு பேச கூடாது. மணி அண்ணனோடு பேசிக்கொள்ளலாம் என்று முடிவுக்கு வந்துவிட்டார். அந்தளவுக்கு தனது அனுபவங்களையும், நிகழ்கால நகர்வுகளையும் பகிர்ந்து கொண்டார்.

மறுநாள் காலையில் வீரப்பனை சந்திக்கிறோம். முதலில் வீரப்பன் குழுவில் இருந்து ஒருவர் வந்தார், அவரிடம் மணி அண்ணன் வந்திருக்கிறார் என்றோம். இதைக் கேட்ட உடனேயே வீரப்பன் விரைவாக வந்தார். அதாவது 1993இல் என்னை வீரப்பனிடம் அறிமுகப்படுத்தி வைத்தது மணி அண்ணன். 2000இல் விரப்பனிடம் அண்ணனை அறிமுகப்படுத்த வேண்டிய சூழல் எனக்கு நேர்ந்தது.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சிபிஎம் அலுவலக தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

**இராசிபுரம் :** நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் ஜாதி மறுப்பு காதல் இணையர்களுக்கு பாதுகாப்பு அளித்த, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய ஜாதி அமைப்பைச் சார்ந்த சமூக விரோதிகளைக் கண்டித்தும், இதுபோன்ற ஜாதி வெறி பிடித்த ரவுடிகளை, அவர்கள் நடத்தும் அமைப்புகளை தமிழக அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டியும் இராசிபுரம் நகரக் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டமானது 19-06-2024 அன்று இராசிபுரம் பழைய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு இராசிபுரம் நகரக் கழகச் செயலாளர் பிடல் சேகுவேரா தலைமை தாங்கினார்,

இராசிபுரம் நகரக் கழகத் தலைவர் அன்பரசன், விசிக கபிலன், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மணிமாறன், விசிக செங்குட்டுவன், அ.மா.தே.சம்மேளனம் மீனா, விசிக நடராசன், கழக மல்லை ஒன்றியப் பொறுப்பாளர் பெரியண்ணன், திருச்செங்கோடு நகரக் கழகச் செயலாளர் பூபதி, AIYF மோகன், விசிக காமராஜ், திராவிடர் கழகம் செல்வகுமார், விசிக அரவிந்தன், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி சாதிக், விசிக செங்கோட்டுவேல், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி பயாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விசிக வழக்கறிஞர் நெ.அய்யாசாமி தொடக்கவுரையாற்றினார்.

நாமக்கல் மாவட்டக் கழகத் தலைவர் மு.சாமிநாதன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட துணைச் செயலாளர் T.N.கிருஷ்ணசாமி, விசிக மண்டலச் செயலாளர் வ.அரசன், நாமக்கல் மாவட்டக் கழக அமைப்பாளர் முத்துப்பாண்டி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

இராசிபுரம் நகரக் கழக அமைப்பாளர் சுமதி மதிவதனி நன்றி கூற ஆர்பாட்டம் நிறைவுபெற்றது.

**தேனி :** அருந்ததியர் இளைஞர் அழகேந்திரன் ஆணவக் கொலையைக் கண்டித்தும், ஆணவக் கொலைக் குற்றங்களைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றக் கோரியும், தமிழ்த்தேச மார்க்சியக் கழகம் ஒருங்கிணைத்த கண்டன ஆர்ப்பாட்டம் தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்பேத்கர் திடலில், 28.06.2024 அன்று நடைபெற்றது.

இதில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

**மதுரை :** ஜாதி ஆணவப் படுகொலை செய்யப்பட்ட அருந்ததியர் சமூக இளைஞர் அழகேந்திரன் மரணத்திற்கு நீதி கேட்டு தமிழ்ப்புலிகள் கட்சி சார்பில் நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் மணி அமுதன் பங்கேற்று கண்டன உரையாற்றினார்.

# நிமிர்வோம் வாசகர் வட்டம் 22-வது சந்திப்பு



நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 22வது சந்திப்பு, 30.06.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

தோழர் ஈரோடு பேரன்பு-வின் ராப் இசை பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது..

நிகழ்விற்கு கழகத் தோழர் தேன்மொழி தலைமை தாங்கினார், தோழர் லீலா வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் சிறப்பு அழைப்பார்களாக பங்கேற்ற எழுத்தாளர் விஜயபாஸ்கர், “பெண் எனும் பிள்ளைப் பெறும் கருவி - வாடகைத் தாய் முறை மீதான கேள்விகள்” நூல் குறித்தும், தோழர் எட்வின் பிரபாகரன், மருத்துவர் சிவபாலன் எழுதிய “அன்பிற்கும் உண்டு அடைக்கும் தாழ்” நூல் குறித்தும் திறனாய்வு செய்தனர்..

நிறைவாக தோழர் ஆனந்தி நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது. இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கொளத்தூரில் குடும்ப விழா !

23.06.24 ஞாயிறு நண்பகல் 11.30 மணியளவில் கழகத் தலைவர் பிறந்த நாள் - குடும்ப விழா கொளத்தூர் S.S. திருமண மஹாலில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கழக மேட்டூர் நகரத் தலைவர் செ.மார்ட்டின் தலைமை வகித்தார். ம.க.இ.க. பாடகர் கோவன் கலைக்குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து உக்கம்பருத்திக்காடு ஆசிரியர் செல்வேந்திரன், சிவா மீடியா சிவசுப்பிரமணியம், காவை சித்துசாமி, கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் மற்றும் கழக புதுவை மாநிலத் தலைவர் லோகு. அய்யப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி தலைவர் உடனான தங்களின் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர்.

கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் மற்றும் மாற்றுக் கட்சி தோழர்கள் தலைவருக்கு வாழ்த்து தெரிவித்து பயனாடை, நன்கொடை வழங்கி மகிழ்ந்தனர்.

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. டேவிட் தலைமையில் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்த கேக்கை தலைவர் மற்றும் இணையர் கமலம் ஆகியோர் வெட்டி தோழர்களின் அன்பை பகிர்ந்துகொண்டனர்.

தலைவர் தனது பிறந்த நாள் பரிசாக 15 நாள் சிறை செல்லத் தயாராக உள்ள தோழர்கள் பட்டியல் தயாரிக்கும்படியும், சிறை



செல்வதற்கான அவசியம் வருகின்றன தங்களை தயார்படுத்திக்கொள்ளுங்கள் என வேண்டுகோள் விடுத்து உரையாற்றினார்.

கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார் நன்றி கூறினார். கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

குடும்ப விழாவிற்கான அசைவ உணவு விருந்திற்கான செலவினங்களுக்கு கழகத் தோழர்கள் பங்களிப்புடன் கொளத்தூர் K.V. கந்தசாமி குடும்பத்தார் மற்றும் PSR பெரும்பங்கு வகித்தனர்.

இந்நிகழ்வில் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மேலவளவு போராளிகள் நினைவிடத்தில் மரியாதை



ஜூன் 30 அன்று மேலவளவு ஜாதி ஒழிப்பு போராளிகள் நினைவு நாளை முன்னிட்டு மதுரை மாவட்டக் கழக சார்பில் மாவட்டச் செயலாளர் மா.பா. மணி அமுதன் தலைமையில் மேலவளவு போராளிகள் நினைவிடத்தில் மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

இதில் கழக மேலூர் பொறுப்பாளர் சத்தியமூர்த்தி, ஆசிரியர் நடராஜன், அழகர் பிரபாகரன், காளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதி!

மதுரை பிரபாகரன் அழகர் - ரூ.1000/-

நன்கொடை வழங்க விரும்புவோர் கீழ்கண்ட ஜி.பே எண்ணில் தங்களது பங்களிப்பை வழங்கலாம்

ஜி.பே எண் : 63697 76351

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : July 05, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran